
பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

தேசியக் கருத்தரங்கம்

# தமிழிலக்கியத்தில் அறம்

22.02.2017

ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு




முதுகலைத் தமிழ்த்துறை

ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது
கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது
DST FIST Supported College

பெரியகுளம் - 625601, தேனி மாவட்டம்.

16. திருக்குறளில் அறம்
செல்வி.ச.பவித்ரா 77
17. வள்ளுவர் வழங்கும் அறம்
செல்வி.க.முத்துச்செல்வி 83
18. குறள் கூறும் அறம்
செல்வி.பா.அபிராமி 88
19. பழமொழி நானூறில் அறம்
செல்வி. வே. பிரீத்திகா 92
20. பழமொழி நானூறு கூறும் அறச்சிந்தனைகள்
செல்வி அ.அம்சலேகா 99
21. திருமந்திரம், திருக்குறளில் அறம்
முனைவர் செ.ரெஜினா 104
22. சிலப்பதிகாரத்தில் கோவலனின் அறச்செயல்கள்
திருமதி பா. பவித்ராஜெகன் 111
23. மணிமேகலையில் அறம்
முனைவர். ஞா.பிரான்சிஸ்கேதரின் 115
24. மணிமேகலையில் அறம்
செல்வி.சே.மெர்லின்மேரி 122
25. சாத்தனாரின் அறக்கோட்பாடு
முனைவர் சி.கௌசல்யா 127
26. மணிமேகலையில் வாழ்வியல் நெறி
முனைவர் ஆ. ஜீனியராணி 131
27. வளையாபதியில் அறம்
முனைவர் சௌ. ஜான்சி ராணி 136
28. இயேசு காவியம் காட்டும் அறம்
அருட்சகோதரி முனைவர் அல்போன்சாள் 141
29. தேம்பாவணியில் அறச் சிந்தனைகள்
சே. சலோமி இராஜரீகம் 146
30. புதுமைப்பித்தனின் படைப்புகளில்...
திருமதி. ஜெ. ஜமுனாராணி 151
31. பாரதியின் பன்முகப் பார்வையில் அறம்
செல்வி பி.சர்மிளா 156
32. நாட்டுப்புறப்பாடல்களில் பெண்கள் பேணும் அறம்
முனைவர். அருட்சகோதரி சகாயலில்லி 161



33. தலித்திய நாவலில் சமத்துவச் சிந்தனைகள்
அ.சகாயமேரி 167
34. காப்பியங்களில் அறம்
முனைவர் கோ. சந்தனமாரியம்மாள் 171
35. தமிழிலக்கிய வெளியில் பெண்களின் அறம்
முனைவர் அ.கா.அழகர்சாமி 177
36. தேம்பாவணியில் விஞ்சி நிற்பது இல்லற விழுமியங்கள்: ஒரு மீள்பார்வை
முனைவர்.இரா.அருணா தேவராஜ் 184
37. இறையன்பு போதிக்கும் குடும்ப அறம்
முனைவர்ஜெ.அருள் இருதயஜெயந்தி 189
38. அசோகமித்திரனின் அப்பாவின் சிநேகிதர் சிறுகதைகள் காட்டும் அறம்
வே. புளோரா பவுலின் மேரி 195
39. திரிகடுகத்தில் அறச்சிந்தனைகள்
திருமதி.செ.லிட்டில் ப்ளவர் 199
40. இயேசு காவியத்தில் அறச்சிந்தனைகள்
முனைவர்.தே.ராஜசீலி 204
41. சுந்தரகாண்டத்தில் பெண்ணறம்
அருட்சகோதரி அ.சவரியம்மாள் 208
42. வள்ளுவர் வாழ்வியலில் அறம்
முனைவர் மா. பாப்பா 213
43. குறள் கூறும் அறம்
செல்வி.த.ஜெயசித்ரா 221
44. இனியவை நாற்பது கூறும் அறம்
செல்வி பா.சுமதி 226
45. புறநானூற்றில் அறம்
செல்வி யுவராணி 230
46. அறத்தில் சிறந்த விவிலியப் பெண்கள்
செல்வி க.ஜுலியட்தேவகிருபை 234
47. அற இலக்கியம் காட்டும் இல்லறம்
இ.சத்தியசீலா 239
48. அற இலக்கியத்தில் விருந்தோம்பல் பண்பாடு
முனைவர் பெ.கவிதா 244

**உலகைக்காக்கும் கல்வி:**

ஆவதும், அழிவதும் கல்வியாளராலே என்பது இக்காலத்திற்கும் பொருந்தும். இது நிகழக்கூடாது, நிலவுலகம் நிலைகுலையக்கூடாது உலகைக் காக்கும் கல்வியை உற்ற துணையாகப் பின்பற்ற வேண்டும என்பதே பாரதியின் அவா.

"வெற்றி கூறுமின் வெண்சங் கடதமின்
கற்றவராலே உலகு காப்புற்றது"(பா.க.ப.எ.67)

**பயன் தரும் பக்திக் கல்வி:**

கல்வியும் ஆன்மிகமும் நாட்டின் இரு கண்கள். ஒழுக்கத்தோடு கூடிய கல்வி உருவாக பக்தியுடன் புகட்டும் கல்வி பயன் விளைக்கும் இதையே வள்ளுவரும்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடெல்ல மற்ற யவை" (குறள் எ.400)

என்கிறார். அழியாத செல்வம் கல்வி அச்செல்வத்தை ஒருவன் பெற்றுவிட்டால் அல்லல் நீங்கும் அவனி ஓங்கும். இதை பாரதியும் கண்டான் பாடலால் பறைசாற்றினான். இன்று இந்தியா உலக நாடுகளில் முதன்மை நாடாக முன்னேற கல்வியில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று முயன்று முனைந்த கொண்டிருக்கிறது. ஆனால் பாரதி பத்தொன்பதாம் நுற்றாண்டிலே கனவு கண்டான்.

தெய்வபக்தியால் கல்வி வளரும். அக்கல்வி வளர்ந்தால் என்ன நடக்கும் என்பதை கீழ்க்கண்ட வரிகளில் நுவல்கின்றன.

"கல்வி வளரும் பல
காரியங் கையுறும் - வீரிய மோங்கிடும்
அல்ல லொழியும் - நல்ல
ஆண்மை யுண்டாகும் அறிவு தெளிந்திடும்"

என்று பக்தியால் வளரும் கல்வி பயனுடையதாக விளங்கும் என்கிறரான் பாரதி. இதில் ஒழுக்கம் உயர்ந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

**முடிவுரை:**

ஒருவனுக்கு பணம், புகழைக் கொடுப்பதில்லை கல்விதான் புகழைத்தரும் என்றும், அழியாச் செல்வம் கல்வி. பக்தியால் வளரும் கல்வி பயனுடையதாக விளங்கும் என்றும், ஏழைச் சிறுவனுக்குப் பணத்தைக் கொடுத்து உதவி செய்வதை விட கல்வியை புகட்டுவது பயனையும், நற்பண்பையும் தரும் என்றும் கல்வியின் பெருமைகளைப் பற்றி பாரதி எடுத்துரைக்கிறார்.





## 32. நாட்டுப்புறப்பாடல்களில் பெண்கள் பேணும் அறம்

**முனைவர். அருட்சகோதரி சகாயலில்லி**
துணை பேராசிரியை, தமிழ்த்துறை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக்கல்லூரி,
பெரியகுளம், தேனி மாவட்டம் 625601

பெண் முழுமையான தாய்மையின் வடிவம். பெண்ணாலே இவ்வுலகில் நடக்கும் அனைத்து நன்மைகளும் உருவாகின்றன. தாய் நினைத்தால்தான் தன் பிள்ளைகளை நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் உருவாக்க முடியும். தன் மகன் தவறு செய்யும்போது அவனைக் கண்டித்தும், தண்டித்தும். அரவணைத்தும் திருத்துவதால் தான் இன்றளவும் இந்தச் சமுதாயம் பல நன்மைகளால் நிறைந்திருக்கின்றது.

இவ்வுலகு வாழ்வதும் பெண்ணாலே, இவ்வுலகின் தீமைகள் வீழ்வதும் பெண்ணாலே என்னும் பழமொழிக்குப் புதிய பொருளை வழங்குபவள் பெண்ணே என்பதை டி.எஸ். ராகவன் "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பது என்னைப் பொறுத்தவரை பழமொழி அல்ல; பழிமொழி தவறான பாதையில் செல்லும் கணவனை, மகனை மட்டுமல்ல. தந்தையையும் கூடத் திருத்தி, அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைவதற்குக் காரணமாக இருக்கிறாள் பெண். ஆக நன்மை ஆவதும் பெண்ணாலே தீமை அழிவதும் பெண்ணாலே."[1] என்பர். பெண்ணின் பொறுப்பினாலும், அவள் தன் குடும்பத்தின் மீது கொண்ட அன்பினாலும் சமுதாயம் சீர்த்திருத்தம் பெற தூண்டுகோலாய் இருப்பதும் அறமே என்பதை நாட்டுப்புறப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

அறம் என்ற சொல்லுக்கு அறிஞர் பெருமக்கள் பல்வேறு விதமானக் கருத்துக்களைப் பகர்ந்தாலும் நீதி என்னும் பொருளே நிலையானது. அறச்செயலால் மக்களின் உள்ளப்பிணி நீங்கி நலமடைவர். நாம் வாழும் சமூகம் நலமாக வாழ வேண்டுமென்றால் நீதியின் வழியில் வாழ வேண்டும். அன்பும் அறிவும் நிறைந்து விளங்கவேண்டும். மக்கள் ஒரவருக்கொருவர் அன்பு பரிவு இரக்கம் உடையவர்களாய் திகழ வேண்டும். ஒன்றுப்பட்டு வாழ்வதே அறத்தினாலனது.

அலர்ந்தார்க்கு ஒன்று ஈந்த புகழும் துளங்கினும்
தன்குடிமை குன்றாத் தகைமையும் அன்பு ஓடி
நாள்நாளும் நட்டார்ப் பெருக்கலும் - இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை (திரிகடுகம்: 41):

துன்பப்பட்டு வருவோர்க்குப் பொருள் கொடுத்தலும். தளர்ந்த காலத்திலும் தம் குடி ஒழுக்கத்தைக் காத்தலும், தம்மோடு நட்பு கொண்டவரிடத்து அன்பு கொண்டு அவர் மேன்மையடைய செய்வதும் ஆகிய பிறர்க்கு உதவும் சிந்தனையைத் தலையாய அறங்களாக திரிகடுகம் எடுத்துரைக்கிறது. இதையே நாட்டுப்புறப்பாடல்களில் பெண்கள் தாம் சார்ந்த சமுதாயத்தை சீாடச் செய்ய தன்னையே மகளாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக, தலைவியாக தருகிறாள். எந்நிலையில் பெண் இருந்தாலும் சமுதாயம் நலம்பட அறம் வலுப்பட தன்னையே கையளிக்க தயாராகிறாள். என்பதை நாட்டுபுறப்பாடல்கள் காட்டுகின்றன. தாய் வடிவின் ஒரு துணுக்கே கிருஷ்ணனாகவும், புத்தராகவும், கிறிஸ்துவாகவும் ஆகி இன்றளவும் நம்மை வழிநடத்தி வருகிறது.

**குடும்பத்தில்:**

ஆண் நன்முறையில் வாழ்க்கை நடத்த அவனுக்கு அதிகமான உதவி செய்பவள் பெண்தான். அவளால்தான் அவனுடைய வாழ்க்கை ஒழுங்கு பெறுகிறது. இப்படி ஆணுக்கு அனைத்து விதங்களிலும் உயர்வு கொடுப்பவள் பெண்

"உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்
அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான் "[2]

விவேகானந்தர் பெண்ணின் மேன்மையைக் "கடவுளைத் தாயாக வணங்கும்போது அடியவர்களுக்கு வலது மார்க்கம் கிட்டுகிறது. வலது மார்க்கம் கருணைமிக்கது. ஆன்மீகத்திற்கு அழைத்துச் செல்வது. கடைத்தேற்றத்திற்கு வழிகாட்டுவது. ஆனால் அதனால் பொருட்செல்வம் கிடைக்காது. கடவுளைத் தந்தையாக வணங்கும்போது அடியவர்களுக்கு இடது மார்க்கம் கிட்டுகிறது. இடது மார்க்கம் மூர்க்கத்தனமானது. பொருட் செல்வத்திற்குத் துணை செய்வது. அதனால் ஆன்மீக அமைதியைப் பெறமுடியாது. எல்லாம் வல்ல இறைசக்தி முதலில் தாய் வடிவைத் தாங்குகிறது. அது தந்தை எனும் கருத்துருவத்திற்கும் முந்தியது. தாய் வடிவின் ஒரு துணுக்கே, ஒரு துளியே கிருஷ்ணனாகவும், புத்தராகவும்,





கிறிஸ்துவாகவும் அவதாரம் கொண்டது"[3] எனக் கூறுவதாக கி. இராசா தம் 'இந்தியப்பெண்ணியம்' என்ற நூலில் எடுத்தாள்கிறார்.

அறனெனப்படட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று (குறள்:49)

குடியினால் தன்னையும், சமுதாயத்தையும் ஏமாற்றி வாழும் கணவனுக்கு அறிவுரை கூறுகிறாள்.

"கள்ளுக்குடிக்கப் போகாதடா
ஏமாளிப்பயலே அட கோமாளிப்பயலே
கடன் கொடுப்பார் யாருமுண்டோ ஏமாளிப்பயலே
பம்மிபம்மி செருக்கி நீ பம்மாத்துரே – என்ன
பலநாளும் சொல்லிபொல்லி ஏமாத்துற"[4]

கள்ளு குடிக்கப் போகாதேடா என்றும், கடன் வாங்காதே என்றும், பல நாட்களாகத் தன்னை அவன் ஏமாற்றுகிறான் என்றும், கள்ளுக் குடித்தால் தலையாட்டம், பேயாட்டம், வரும் என்றும், காட்டிற்கும், வீட்டிற்கும் வித்தியாசம் தெரியாது என்றும், குடியின் வேகத்தில் வண்டு பூச்சி கடித்துவிட்டால் உனது உயிருக்கும் ஆபத்து, என் குடும்ப வாழ்க்கைக்கும் விபத்து என்றும் தன் கணவனுக்கு அறிவுரை கூறுகிறாள்.

**திருந்திய கணவன்:**

"குடியுங் குடிக்க மாட்டே(ன்)
குடும்பத்தையு(ம்) கெடுக்க மாட்டே(ன்)
கூடி வாழ்வோ(ம்) ஓடி வாடி மணித்தங்கமே, தங்கம் - ஏங்
கொணவதியே வந்திரடி ஏ மணித்தங்கம்"[5]

கணவனின் தீய குணத்தைத், தவற்றைத் திருத்த வேண்டியது மனைவியின் கடமை, நல்ல மனைவி என்பவள் பொறுமையாக மட்டும் இருந்துவிட்டால் போதாது. தன் கணவனைத் திருந்தி நல் வாழ்க்கை வாழ வழிகாட்டுபவளாக இருக்க வேண்டும். அப்படித் தன் கணவன் தன் தவறை உணர்ந்து திருந்தி வந்ததை இப்பாடல் காட்டுகிறது. கணவனின் குடி விலகி அவன் திருந்தி வர விரும்புகிறாள் இப்பெண். எனவே, கணவனை விட்டுவிட்டுத் தனியே வந்துவிடுகிறாள். அவனும் தன் தவறை உணர்ந்தவனாக அவளைத் திரும்பத்தன்னுடன் வாழும்படி அழைக்கிறான். அவனே தன் மனைவியைப் பெருமையாகக் கூறுகிறான். மணித்தங்கம் என்றும், குணவதி என்றும் பாடுவதிலிருந்து அவனின் வாழ்வில் அவள் மிகத்தேவை என்பதை அவன் உணர்கிறான்.

**வேலை செய்யத் தூண்டுபவள்:**

சேவல் கூவும் முன் கழனிக்குச் செல்பவனே, தன் குடும்பம் செல்வநிலையில் வாழ, வளமை கொண்டு வருவான். ஆனால் அவ்வாறு

உழைப்பவனுக்கு உழைக்க ஊக்கமூட்டுபவள் பெண்ணே என்பதைச்

"சேவல் கூவுது மச்சான் - மச்சான்
சாலு கோலு எடு மச்சான்"[6]

என்ற பாடல் கூறுகிறது. பெண் என்ற தூண்டுகோல் ஆண் என்ற திரியைத் தூண்டிவிட்டு, உற்சாகம் அளித்து, ஊக்கமூட்டிக் குடும்பம் என்ற சுடரைத் தொடர்ந்து ஒளி பெறச் செய்கிறது.

**பணியில் பக்கத்துணையாக:**

பொட்டலில் கிணற்றினை வெட்டி, அதில் தண்ணீர் இறைக்கப் போர்காளையினைப்பூட்டிக், கமலை கட்டி நீர் இறைப்பது எப்படி எனக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியையாகப் பெண் இருக்கிறாள் என்பதை நாட்டுப்புறப்பாடல்கள் காட்டுகின்றன.

"பொட்டலிலே கிணறு வெட்டி
போர்க்காளை கொண்டு பூட்டி
காப்பு போட்ட கருத்த மச்சான்
கமலை கட்டத் தெரியலையே"[7]

என நிலம் செழிக்க, வளம் கொழிக்க, வழி செய்பவள் பெண் என்பதை உணர்த்துகிறாள். குடும்பத்திலும், சமூகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தித் தன் உழைப்பாலும், அறிவாலும் குடும்பத்தைப் பாதுகாக்கிறாள்.

**பிற பெண்களை நாடுபவனைத் திருத்துதல்:**

ஆண்கள் பரத்தையரைத் தேடிச்செல்வதும், அவர்களோடு உறவு கொள்வதும், மனைவி உள்ளபோதே பிறிதொருத்தியை மணப்பதும் ஆகிய பழக்கங்கள் தனி உடைமைச் சமூகத்தில் இடம் பெற்றன. அதனால் மனைவியின் தனி உரிமைகள் காக்கப்பட முடியாமற் போனதுடன், கணவனுக்காக அவள் ஏங்கி நிற்பதும், காத்துக்கிடப்பதுமாகிய நிலைமை உருவானது.

சங்ககாலச் சமுதாயத்தில் ஆண்களிடம் இத்தகைய குறைகள் இருப்பினும் அதைத் தட்டிக்கேட்கவும், வாசல் திறக்க மறுக்கவும் பெண்கள் உரிமை பெற்று இருந்தனர். மன்னிக்க முடியாத தவறைக் கணவன் செய்த போது அவனோடு மனைவி ஊடுவதும், பின் கணவன் மனைவியிடம் பணிந்து இறைஞ்சித் தன்னை ஏற்குமாறு வேண்டுவதும் உண்டு.





அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (குறள்:39)

குழந்தைகளிடம் வைத்த பாசமே கணவனின் குற்றங்களை மன்னிக்க, மறக்கக் காரணமாயிற்று. கணவனை மன்னிப்பதால், மனைவி தோல்வியுற்றதாகத் தோன்றினாலும், அதுவே அவளது குடும்ப வாழ்க்கை சிறப்புற அமைய வழியாகிறது. பெண்களின் பல தன்னலமறுப்புச் செயலால்தான் இன்றளவும் குடும்பம் என்ற அன்பின் பிறப்பிடம் நிலைத்துநிற்க முடிகிறது என்பதை இப்பாடல் காட்டுகிறது.

**"சாமியக் காணோமின்னு
சபையெல்லாம் தேடி வந்தே(ன்)
சக்களத்தித் திண்ணையிலே
சாஞ்சிருந்தா ரன்னேர(ம்)
என்னைய(க்) கண்டொடனே
காலொதறி(க்) கையொதறி
வேட்டிய எடுக்காம**
வந்துட்டாரு வீட்டுப்பக்க(ம்) "[8]

கணவன் வேறு பெண்ணைத்தேடுகிறான். மனைவியைக் கண்டதும் அனைத்தையும் விட்டுவிட்டு ஓடி வந்துவிடுகிறான். கணவன் மற்ற பெண் மேல் மோகம் கொண்டு சென்றுவிட்டான். இதையறியாத பெண் தன் கணவனைத்தேடிச் செல்கிறாள். அவனோ சக்களத்தி வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கிறான். தன் மனைவியைக் கண்டவுடனே அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை. கை,கால் நடுக்கம் ஏற்படுகிறது. அவளைப் பார்த்ததால் பயத்தில் வேட்டி கீழே விழுந்ததை எடுக்கக் கூடத் தைரியமின்றி வீட்டைப் பார்க்க ஓடி வந்துவிட்டான்.

அவனது அந்த நிலையைக் கண்டு பரிதாபப்பட்ட மனைவி அவன் மேல் கொண்ட பாசத்தால் அவன் காலில் முள் தைத்து உள்ளதை உணர்கிறாள். அவன் காலைப்பார்த்தால் கால்முழுவதும் முள் தைத்துக் கிடப்பதை எண்ணி வேதனைப்படுகிறாள் இப்பெண்.

"வீட்டுக்கு வந்தோடனே
வெளக்கப் பொருத்திப் பார்த்தே(ன்)
காலுல தச்ச முள்ளு
கணக்கி லடங்கலயே"[9]

மனைவி தன் கணவன் தவறு செய்யும்போது குழந்தையைப்போலத் தண்டிக்கவும் வேண்டும். தவறை உணர்ந்துவிட்டான் என்றால்

தாயைப்போல் அரவணைக்கவும் வேண்டும். ஒரு ஆணைத் திருத்துபவளும் பெண்தான். அவன் திருந்தியபின் அவனை ஏற்று நல்ல மனிதனாகப் பண்புள்ளவனாக மாற்றுவதும் பெண்தான். ஆகவே பெண்ணால் மட்டுமே சமுதாயம் உயர்வு பெற முடியும்.

**நிறைவாக:**

பெண் இன்றி இவ்வுலகு முன்னேற்றம் அடைய முடியாது. பாலுடன் அறத்தையும் வீரத்தையும். அன்பையும். பாசத்தையும். பல நற்பண்புகளையும் வளர்க்கும் சக்திபடைத்தவள் தாய் மட்டுமே. மனிதனின் முதற் பள்ளிக்கூடம் தாயின் மடி. அவனின் முதல் அகராதியே தாய் தான். அத்தகைய தாயின் அரவணைப்பில் நற்பண்புகளைக் கற்றுக் கொள்ளும் சமுதாயம் நல்லதாகவே அமையும். பெண்ணின் மிகப்பெரிய சாதனை நன்மக்களைப்பெறல். அவர்களை நல்லவர்களாக இச்சமுதாயத்திற்குக் கொடுத்தல்.

பெண் உரிமை கட்டுப்படுத்தப்படாதபோது பல அறங்கள் உலகில் வளர்ந்தன. பல நன்மைகள் சமுதாயத்தில் விளைந்தன. பெண்களின் முன்னேற்றத்தால் நாட்டில் பல நல்லறங்கள் சிறந்தோங்கின. சமுதாயமானது அறத்துடனும் அமைதியுடன் அகமகிழ்வுடன் வாழ பெண்களே அடித்தளம் என்பதை நாட்டுப்புறப்பாடல்கள் வழி உணர முடிகிறது.

**குறிப்புகள்:**

1.. டி.எஸ். ராகவன், இந்தியன் வங்கியின் முன்னாள் தலைவர், ப. 21.
2. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், தொகுதி - 1, ப. 71
3. கி. இராசா, இந்தியப்பெண்ணியம், ப. 28.
4. சு. சண்முகசுந்தரம்.திருநெல்வேலிமாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள் சமுதாய அமைப்பு. ப.432
5. ஒ. முத்தையா. நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்; தொகுதி::7 ப :157
6. சு. சண்முகசுந்தரம். நாட்டுபுறவியல். ப 119
7. மேலது., ப. 120.
8. ஒ. முத்தையா. நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம், தொகுதி - 7, ப. 161.
9. மேலது., ப. 161.





## 33. தலித்திய நாவலில் சமத்துவச் சிந்தனைகள்

**அ.சகாயமேரி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை - உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை - 18

**முகவுரை :**

"நாதமேது வேதமேது நாற்குலங்கள் ஏதடா" என்று சிவவாக்கியரின் வரிகளுக்கு ஏற்ப சாதி மதம் இல்லாத ஒடுக்குதல்கள் இல்லாத சமத்துவ வாழ்க்கையை தமிழ் கூறும் நல்லுலகிற்கு உணர்த்த விரும்பும் தமிழன்னையின் புதிய முகம் தான் தலித் இலக்கியங்கள்.

தலித் இலக்கியங்களுக்கு முன்னோடியாக ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் கறுப்பு இலக்கியங்கள் குறிப்பிடப்படுகிறது. இதனை அடியொற்றி மராத்தியிலும் அதனைத் தொடர்ந்து கன்னடத்திலும் 19ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் மொழியிலும் தோற்றம் பெற்று தற்காலத்தில் தமிழ் சிந்தனை மற்றும் செயல் பாட்டுத் தளங்களை இந்த இலக்கியங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. அந்த வரிசையில் ஸ்ரீதர கணேசனால் படைக்கப்பட்ட 'சடையன்குளம்' நாவலில் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவ சிந்தனைகளை இக்கட்டுரை ஆய்கின்றன.

**தலித் - சொற்பொருள் விளக்கம்**

'தலித்' என்பது மராத்திய மொழிச்சொல் ஆகும். 'தல' என்பது மராத்திய மொழியில் பூமியையும், மண்ணையும் குறிக்கும். அதை ஒட்டியே இந்த மண்ணின் வேர் பிடித்தவர்கள் என்ற பொருளில் தலித் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்று பொருள் விளக்கம் தருகிறார் தயாபவார்.

பிரிட்டான்னிக்கா தகவல் களஞ்சியம் 'தலித்' என்ற சொல்லுக்கு 'தலித் (Dalit) இந்த மராத்தியச் சொல்லுக்கு உடைந்து போனவர்கள் என்று பொருள். 1970களில் மஹாராஷ்டிராவில் வசிப்பவர்களும், இந்திய வரலாற்றில் சாதி முறையில் ஒடுக்கப்பட்ட, தீண்டத்தகாத ஹரிஜன ஷெட்யூல்ட் இனங்களைச் சார்ந்த மக்களில் சிலரும் தங்களைத் தலித் என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர். பின்னர் இதே பெயர் நிலைத்துவிட்டது" என்று விளக்கம் தருகின்றன என்றாலும் தற்காலத்தில் தலித் என்ற சொல்லுக்கு பரந்த தளத்தில் பொருள் சொல்லப்படுகின்றன.